

FCMI9J

# 5. வண்ணம் தொட்டு...

வண்ணம்தொட்டு வண்ணம் தொட்டு
படங்கள் வரையலாம்
வானவில்லைத் தொட்டும் கொஞ்சம்
படங்கள் வரையலாம்

நீலம்தொட்டு நீலம்தொட்டு
கடலும் வரையலாம்
கடலலையில் கடலலையில்
கால்கள் நனைக்கலாம்

பச்சைதொட்டு பச்சைதொட்டு
மரங்கள் வரையலாம்
மரக்கிளையில் மரக்கிளையில்
ஊஞ்சல் ஆடலாம்

சிவப்புதொட்டு சிவப்புதொட்டு
பூக்கள் வரையலாம்
பூக்கள்போல பூக்கள்போல
பூத்துச் சிரிக்கலாம்

**பாடல்களைக் கருத்தூன்றிக் கேட்டுப் புரிந்துகொள்க – பாடி மகிழ்க.**



2nd_Tamil_Term-1_Bodypages.indd 32 20-01-2020 19:35:37

# பயிற்சி

## சொல்லிப் பழகுக

வரையலாம் | நனைக்கலாம் | ஆடலாம்

சிரிக்கலாம் | கடலலை

## படித்தும் எழுதியும் பழகுக

வண்ணம் | கால்கள்

மரங்கள் | கடலலை | வானவில் | படங்கள்

பூக்கள் | மரக்கிளை

## பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| 1. | கடலலையில் | – | படங்கள் வரையலாம். |
| 2. | பூக்கள்போல | – | கால்கள் நனைக்கலாம். |
| 3. | வண்ணம் தொட்டு | – | ஊஞ்சல் ஆடலாம். |
| 4. | மரக்கிளையில் | – | பூத்துச் சிரிக்கலாம். |

GLY7BV

## பேசுவோம் வாங்க!

வானவில்லைத் தொட்டு என்னென்ன வரைந்தார்கள்?



2nd_Tamil_Term-1_Bodypages.indd 33 20-01-2020 19:35:37

## ஒத்த ஓசையில் முடியும் சொற்களை மட்டும் வட்டமிடுக

படங்கள் ஊஞ்சல் கால்கள் மரங்கள்

வரையலாம் நனைக்கலாம் வானவில் சிரிக்கலாம்

## வண்ணம் இது. பொருள்கள் எவை?

| | | | |
|---|---|---|---|
| வெள்ளை | சோறு | பால் | கொக்கு |
| கருப்பு | | | |
| பச்சை | | | |
| சிவப்பு | | | |

## பாடலைத் தொடர்ந்து பாடுக


கருப்புதொட்டு கருப்புதொட்டு
__________ வரையலாம்
காகம்போல காகம்போல
கரைந்து பார்க்கலாம்

வெள்ளை தொட்டு வெள்ளை தொட்டு
________________ வரையலாம்
________________________________
________________________________



2nd_Tamil_Term-1_Bodypages.indd 34 20-01-2020 19:35:38

## படத்தையும் சொல்லையும் பொருத்துக









| | |
|---|---|
| முட்டை | மரங்கள் |
| பெட்டிகள் | தட்டுகள் |
| பூ | மரம் |
| முட்டைகள் | பூக்கள் |
| தட்டு | பெட்டி |

## உரிய பன்மைச் சொல்லை எழுதுக

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மிட்டாய் | மிட்டாய்கள் | பூ | பூக்கள் | பழம் | பழங்கள் |
| சட்டை | ---------- | ஈ | ---------- | பட்டம் | ---------- |
| பொம்மை | ---------- | தேனீ | ---------- | பாடம் | ---------- |
| மேசை | ---------- | புறா | ---------- | புத்தகம் | ---------- |
| பை | ---------- | மைனா | ---------- | வண்ணம் | ---------- |

# 6. என் கற்பனையில்...



நேயன், நாம் படம் வரையலாமா?



ஓ... வரையலாமே!



என்ன வரையலாம்?



வீடு வரையலாமா?








சரி, எனக்கும் வீடு வரையத் தெரியும். வரையலாமே.



நிலா, உனக்குப் பிடித்தது போல நீ வரை. எனக்குப் பிடித்தது போல நான் வரைகிறேன்.

(இருவரும் வரையத் தொடங்குகின்றனர்)




**உரையாடலைக் கேட்டும் படித்தும் புரிந்துகொள்க.**



2nd_Tamil_Term-1_Bodypages.indd 36 20-01-2020 19:35:42

என் வீட்டிலிருந்து பார்த்தால் மலை தெரியும்.



என் வீட்டிற்குப் பக்கத்தில் ஆறு இருக்குமே!



என் வீட்டின் இரு பக்கமும் மரங்கள் இருக்குமே!



என் வீட்டிற்கு முன்பக்கம் அழகான பூச்செடிகள் இருக்கும்.



வீட்டிற்கு எனக்குப் பிடித்த நீல வண்ணம் தீட்டுவேன்.



என் வீட்டிற்கு மஞ்சள் வண்ணம் அடிப்பேன்.



என் வீட்டில் எனக்குப் பிடித்த பூனைக்குட்டி வரைவேனே!




என் வீட்டுத் தோட்டத்தில் வாத்துகள் இருக்குமே!



என் வீட்டு மரத்தில் ஊஞ்சல் ஆடலாம்.



என் வீட்டின் படிக்கட்டில் சறுக்குப் பலகை இருக்குமே!



நான் வரைந்து முடித்துவிட்டேன்.

நானும் வரைந்து விட்டேன்.

நீ வரைந்த வீடு எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது.

உன் வீடும் அழகாக உள்ளது.

## எது யாருடைய வீடு? கண்டுபிடியுங்கள். எழுதுங்கள்





பெருமிதம்



நாங்கள் வரைந்த படங்களைப் பார்த்து எல்லாரும் பாராட்டினார்கள். பெருமையாக இருந்தது. நீங்கள் எப்பொழுதெல்லாம் பெருமைப்பட்டிருக்கிறீர்கள்?



## உனக்குப் பிடித்ததை நீயும் வரையலாமே



2nd_Tamil_Term-1_Bodypages.indd 38 20-01-2020 19:35:43

# பயிற்சி

## படித்துப் பழகுக

| | |
|---|---|
| படம் வரையலாமா | பிடித்ததுபோல |
| இரு பக்கமும் | வீட்டிற்குப் பக்கத்தில் |
| ஊஞ்சல் ஆடலாம் | சறுக்கி விளையாடலாம் |

## எழுதிப் பழகுக

வீடு தோட்டம் படிக்கட்டு மலை

ஆறு பூனைக்குட்டி வாத்து சறுக்குப்பலகை

## பொருத்தமான குறியிடுக – சரி ✓ தவறு ✗

1. நிலாவின் வீட்டிலிருந்து பார்த்தால் மலை தெரியும். ☐
2. நேயன் வீட்டின் இரு பக்கங்களிலும் மரங்கள் இருக்கின்றன. ☐
3. நிலாவின் வீடு மஞ்சள் நிறமுடையது. ☐
4. நேயன் வீட்டில் வாத்துகள் இருக்கின்றன. ☐
5. நிலா வீட்டு மரத்தில் ஊஞ்சல் ஆடலாம். ☐

## வாய்மொழியாக விடை தருக


1. நேயன், நிலா வரைந்தனவற்றுள் உனக்குப் பிடித்தவை எவை? காரணம் கூறுக.

JL4EHU


## விடை எழுதுக

1. நேயன், நிலா இருவரும் என்ன வரைந்தார்கள்?
2. நேயன் என்னென்ன வரைந்தான்?
3. நிலா வரைந்த வீடு பற்றி இரண்டு தொடர்கள் எழுதுக.

## படத்திற்குரிய பெயரை எழுதுக



## எந்த இடம்? என்ன பொருள்? எழுதுக






2nd_Tamil_Term-1_Bodypages.indd 40 20-01-2020 19:35:44


என்ன பதில் சொல்லியிருப்பார்கள்?






2nd_Tamil_Term-1_Bodypages.indd 41 20-01-2020 19:35:56

## யார் என்ன செய்கிறார்கள்?



பெயர்: சிறுமி

செயல்: தூங்குகிறாள்



பெயர்: பட்டம்

செயல்: ___________________________



பெயர்: ___________________________

செயல்: ___________________________



பெயர்: ___________________________

செயல்: ___________________________



பெயர்: ___________________________

செயல்: ___________________________



பெயர்: ___________________________

செயல்: ___________________________



2nd_Tamil_Term-1_Bodypages.indd 42 20-01-2020 19:36:03